வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# பல்துறை வித்தகர் வலம்புரிஜான்

**மா. யுவஸ்ரீ**

முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழாய்வுத் துறை)

தூய வளனார் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 02

**ஆய்வுச் சுருக்கம்:**

கிறித்தவ மறைப்பணியாளர்கள் தமிழ்நாட்டில் இலக்கணம், இலக்கியம், உரைநடை, அச்சுக்கலை வளர்ச்சிக்கு அரும் தொண்டு ஆற்றியுள்ளனர். மேலைநாட்டுக் கிறித்தவர்களைப் பின்பற்றித் தமிழ்நாட்டுக் கிறித்தவர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளனர். தமிழகக் கிறித்தவப் படைப்பாளர்களின் பட்டியலில் வித்தகரான வலம்புரிஜான் அவர்களின் வாழ்க்கைக்குறிப்பு, அரசியல்பணி, இதழியல்பணி போன்றன குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**முன்னுரை:**

இலக்கியம் மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டது. மனிதனின் சிந்தனைக்கும் உணர்வுக்கும் கற்பனைக்கும் விருந்தாக அமைவதாகும். உரைநடையிலோ செய்யுளிலோ கற்பவருடைய எண்ணத்தில் எழுச்சியையும் இதயத்தில் மலர்ச்சியையும் உண்டாக்கும் ஆற்றல் வாய்ந்தது. மனிதனின் மொழியோடு தொடர்புடையது இலக்கியம். மொழியை வாயிலாகக் கொண்டு படைக்கப்பெறும் கலை, பல்வகை வடிவங்களை உடையது. அது பாட்டு வடிவமாகவும், உரைநடை வடிவமாகவும் இருக்கலாம். தமிழ்மொழியின் சீரையும் சிறப்பையும் அதன் தெய்வத் தன்மையையும் உலகுக்கு எடுத்துக்காட்டியவர்கள் ஐரோப்பிய கிறீஸ்தவக் குருமார்கள். தமிழின் சிறப்பை

வெளியுலகுக்கு எடுத்துக் கூறியது மட்டுமன்றி, பல துறைகளிலும் தமிழை வளர்த்தவர்கள் அவர்களே. அவர்களைத் தொடர்ந்து தமிழ் கிறித்தவப் படைப்பாளர்கள் உருவாகினர். அவ்வாறாக தமிழ்இலக்கியத்தைப் பல்வகை வடிவங்களில் கையாண்ட கிறித்துவப் படைப்பாளர்கள் சிலர்உள்ளனர். அவர்களில் வலம்புரிஜான் குறிப்பிடத்தக்கவர் அவரைப் பற்றி கட்டுரையில் காண்போம்.

**ஆசிரியர் குறிப்பு:**

வலம்புரி ஜான் அவர்கள் 1946ஆம் ஆண்டு 14ஆம் நாள் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்ட உவரியில் பிறந்தார். இவரது இயற்பெயர் டி.சி.ஜான் ஆகும். பெற்றோர்பர்னந்தோ, யாக்குளம் ஆகியோருக்கு மகனாய்ப் பிறந்தார். எட்டாம் வகுப்பு வரை உவரியில் பயின்றார். உயர்நிலைப்பள்ளி கல்வியைப் பாளையங்கோட்டை தூய சவேரியார் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரிபடிப்பைமுடித்தார். சென்னை சட்டக்கல்லூரியில் பயின்றுசட்டமுதுவர் பட்டம்பெற்றார் . தொடர்ந்து பச்சையப்பன் கல்லூரியின் வரலாற்றுத் துறையில் பேராசிரியர் ரத்ன சுவாமியிடம் நாலாது மன்றவாதி என்னும் பொருளில் ஆய்வு செய்து 1992இல் முனைவர் பட்டமும்வணிக முனைவர் பட்டமும் பெற்றார். காந்திய சிந்தனையிலும் இதழியலும் பட்டயம் பெற்றார்.

கல்லூரி கல்வி முடிந்தும் பேராசிரியர் பரிந்துரையால் ‘தினமலர்’இதழின் திருச்சி பதிப்பில் உதவி ஆசிரியராக பணியில் சேர்ந்தார்.அடுத்து திருவள்ளூர் திருத்தணி சாலையில் உள்ள பாண்டூர் என்ற ஊரில் காபில் என்ற ஆங்கிலப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராய்ப்பணியாற்றினார். பின்னர் சட்டம் பயின்று வழக்குரைஞராகச் சென்னையில் சிறிது காலம் பணியாற்றினார்.அதனைத்தொடர்ந்து தில்லியில் இந்திய ஆட்சிப் பணி பயிற்சியகம் ஒன்றில் ஆசிரியராக சிறிது காலம் பணியாற்றினார்.

**நூல்கள்:**

இலக்கியம் அரசியல் மற்றும் சித்த மருத்துவம் உள்பட பல துறைகளில் பல நூல்களை எழுதியுள்ளார். அவை

1.வரலாற்றில் கலைஞர் (1971)

2. மீண்டும்மகாத்மா(1974)

3. புதுவைதந்தபோதை(1976)

4. தாகங்கள்(1972)

5. சிலஉரத்தசிந்தனைகள்

6. மண்ணில்விழுந்தமகரந்தங்கள்(1977)

7. பூவுக்குவாசம்வந்தாச்சு

8. நேற்றுஇன்றுநாளை(1995)

9. நீர்க் காகங்கள்(1975)

10. நீங்கள் கேட்காதவை

‘உள்ளதைச் சொல்கிறேன்’ என்னும் மூன்று தொகுதிகளில் பொருளியல் சிக்கல்களையும் சமயச் சிந்தனைகளையும் புலப்படுத்தியுள்ளார். ‘சீனம் சிவப்பானது ஏன்?’ என்னும் ஏட்டில் மக்கள் புரட்சியும் அரசியல் மாற்றங்களும் பற்றி கூறியுள்ளார். ‘சுயாட்சியா? சுதந்திரமா?,’ ‘காந்தியா? அம்பேத்காரா?’, ’நாயகம் எங்கள் தாயகம்’’ ஆகிய நூல்களில் உணர்வுப் பற்றி எடுத்துரைக்கிறார். ‘நீலம் என்பது நிறம் அல்ல’ (1987) என்னும் நூலில், என் கிராமத்து இளைஞர்கள் இன்னமும் கடலை உழுகிறார்கள் கனவுகளை விதைக்கிறார்கள் என்று எடுத்துரைக்கிறார். ‘எல்லா இராத்திரிகளும் விடிகின்றன’ (1986) என்னும் ஏட்டில்உழைப்பு நெய்யின் உயிர் இறுக்கமே குழந்தை என்று தத்துவ வித்தகம் கூறுகிறார்.கவிதா பானு பதிப்பகம் என்ற நூல்வெளியீட்டு நிறுவனம் ஒன்றை வலம்புரி ஜான் உருவாக்கினார். அதன் வழியாக தனது நூல்களையும், ஜெயலலிதா, ஜெயந்தன் ஆகியோரைப் போன்றோர் எழுதிய நூல்களையும் வெளியிட்டார்.

**அரசியல்பணி:**

தனது அரசியல் பணியைத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடங்கினார். 1974ஆம் ஏப்ரல் தொடங்கி1974ஆம் ஆண்டு வரை இந்திய நாடாளுமன்றத்தின் உறுப்பினரானார்.உரிய வயதினை அடைவதற்கு முன்னரே அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டதால் அப்பதவியை இழந்தார்.பின்னர் ஜனதா கட்சியில் இருந்தார்.அங்கிருந்து விலகி அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார்.அ.இ.அ.தி.மு.க சார்பில் 1984 முதல் 1990ஆம்ஆண்டுவரைஅந்த அவையில் உறுப்பினராகப் பதவி வகித்தார். 1983ஆம் ஆண்டில் சட்டமன்ற மேலவையின் உறுப்பினரானார். 1984ஆம் ஆண்டின் இப்பதவியை விட்டு விலகினார். பின் 1996, 1990ஆம்ஆண்டு ஜி.கே மூப்பனாரால் தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட தமிழ் மாநில காங்கிரசுடன் இணைந்து கொண்டார். பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சிறிது காலம் இருந்தார். இறுதி காலத்தில் அரசியலில் இருந்து விலகி இருந்தார்.

**திரைஉலகில்ஜான்:**

பொதுவாகவே எழுத்தாளர்களுக்கும் சிந்தனை உள்ளவர்களுக்கும் இலக்கியவாதிகளுக்கும் திரைப்படத்தின் மேல் ஒரு நாட்டம் உண்டு.அதேபோல்வலம்புரிஜான் அவர்களுக்கும் திரைஉலகில் நாட்டம் ஏற்பட்டது. அவ்வகையில் பாடல்வழியாகத் திரைத்துறையில் கால்பதித்தார்.

1976இல் வெளியான ‘வரப்பிரசாதம்’ என்ற திரைப்படத்தில் அவர் ஒரு பாடலை எழுதும் சூழல் அமைந்தது. அந்தப் படத்தின் இயக்குனர் கே.நாராயணன். அந்தப் படத்தின் கதையை எழுதியவர் கே.எஸ்.மாதங்கன். இசையமைப்பாளர் ஆர்.கோவர்தன். அந்தப் படத்தில் நடித்தவர்கள் ஜெயசித்ரா ரவிச்சந்திரன் என்கிற முன்னணி நட்சத்திரங்கள். காதலும் வாழ்வும் இணைந்த அந்த பாடலுக்கான வரிகளை வலம்புரிஜான் அவர்கள் எழுதினார்கள். அந்தப்பாடல் அப்போது பிரபலமாக எல்லோராலும் பேசப்பட்டது. எஸ்.ஏ.சந்திரசேகர் ‘சுதந்திர நாட்டின் அடிமைகள்’ படத்தில் ஒரு பாடல்

எழுதினார்.கங்கை கொண்டான் இயக்கிய ‘பிரியமுடன் பிரபு’ என்ற படத்தில் ஒரு பாடலை இசையமைப்பாளர் கங்கை அமரன் இசைக்க எழுதினார்.

1986இல் சினிமா ஆசை பலமாக அவரைப் பற்றிக் கொண்டது. திரைப்படத்திற்குள் நுழைந்தார் வலம்புரிஜான். அது அவரை முற்றிலுமாகத் திசைத்திருப்பி விட்டது. வலம்புரிஜான் அவர்கள் தயாரித்து, இயக்கிய படம் “அது அந்தகாலம்" கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் எல்லாம் வலம்புரிஜான் தான். ஆனால், அவருக்கு திரைத்துறையில் அதற்கு முன்பு இயக்குனர் ஆவதற்கான முறையான பயிற்சி எல்லாம் மேற்கொண்டதில்லை. தீவிரமான தைரியத்தில் இயக்கவும் தயாரிக்கவும் துவங்கி விட்டார்.அந்தப் படத்தில் லட்சுமி, சரத்பாபு, சரண்ராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தார்கள்.பானு ரேவதி கம்பைன்ஸ் என்ற பெயரில் அவர் தயாரித்தார். ஐந்து பாடல்கள் இசையமைத்தவர் சந்திரபோஸ். வலம்புரிஜான் ஏற்கெனவே திரைப்படங்களுக்குப் பாடல் எழுதியிருந்தாலும் தன் படத்தில் வைரமுத்து அவர்களை எல்லாப் பாடல்களும் எழுத வைத்தார்.அந்தப் படத்திற்கு உதவி இயக்குனராக பவித்திரன், ஜெயராம் ஆகியோர்பணியாற்றினார்கள். 1988இல் படம் வெளியானது.ஆனால் படம் வெகுவான வெற்றியைப் பெறவில்லை. திரைக்கதையும் சொன்ன விதமும் காலத்திற்குப் பொருந்தவில்லை என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் விமர்சித்தது.

அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆர். மறுபடியும் திரும்பி வரமாட்டார் என்று பொதுவாகப்பேசப்பட்டது.அக்கருத்தைப்பொய்யாக்கும்விதமாகஆர்.எம்.வீரப்பன் ஒரு முயற்சி செய்தார்.பாக்யராஜ் மூலமாக அமெரிக்கா சென்று மருத்துவமனையில் இருக்கும் புரட்சித் தலைவர் பேசுவது, சாப்பிடுவது, நடப்பது போல காட்சிகளைப் படம் எடுத்து வந்து அதை ஒரு காணொளியாக உருவாக்கினார்.அந்தக் காணொளிக்கு பின்னணி வசனம் எழுதி குரல் கொடுத்தவர் வலம்புரிஜான்தான்.வலம்புரிஜான் சொல்லச் சொல்ல நான்

பேப்பரில் எழுதினேன். பிறகு செவன்த் சேனல் நாராயணன் ஸ்டுடியோவிற்கு சென்று நள்ளிரவில் டப்பிங் செய்யப்பட்டது.

**திரைப்படங்களில் இயற்றிய பாடல்கள்:**

- வரப்பி
- ரசாதம், 1976
- சுதந்திர நாட்டின் அடிமைகள்
- பிரியமுடன் பிரபு
- பொறுத்தது போதும், 1988 சூலை 15
- ஞானபறவை, 1991 பிப்ரவரி
- பத்தினி
- அன்பு

மேலும், சமயப்பாடல்கள் சிலவற்றையும் இயற்றியுள்ளார்.

**இதழியல்துறை:**

கல்லூரி முடிந்து வலம்புரி ஜான் அவர்களின் முதல் பணி இதழியல் பணியானது. கல்லூரிபடிப்புமுடிந்ததும் பேராசிரியர் வளனரசின் பரிந்துரையால் தினமலர் இதழின் திருச்சி பதிப்பில் உதவியாசிரியராகப் பணியிற் சேர்ந்தார்.மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரனால் 1980 சூன் 08ஆம் நாள் தொடங்கப்பட்ட தமிழ் இதழான 'தாய்' இதழுக்கு ஆசிரியராகப் பன்னிரண்டரை ஆண்டுகள் பணியாற்றினார். இறைவனின் பேரருளாலும் நம்முடைய உழைப்பாலே 23000 பிரதிகளிலே தொடங்கி 220000 பிரதிகள் வரை விற்கிற ஒரு மாயத்தை அந்நாளில் அந்தஇதழ் செய்ததுஎன்பார்வலம்புரி. புரட்சித் தலைவரின் பத்திரிகை தான் 'தாய்' இதழ் என்றாலும் அந்த நிர்வாகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர் அப்பு என்கிற ரவீந்திரன் ஆவார். 'தாய்' வார இதழ் இலக்கியம், சமூகம், இளைஞர் முன்னேற்றம் என்று முன்னேறிக் கொண்டிருந்தது அனைவரையும் வியக்க வைத்தது.

‘தாய்’ வார இதழில் தனக்குப்பின் பொன் ஜெயந்தன் அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்தார் வலம்புரி.அந்தக் காலகட்டத்தில் பாபநாசம் குறள் பித்தன், முத்தப்பா, சூரியகாந்தன், பழனிபாரதி, கல்லாடன், ராஜா இப்படி ஏராளமானோர் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.பாப்பாமலர் என்ற சிறுவர் இதழுக்கும் மெட்டி என்ற மாதநெடுங்கதை இதழுக்கும் மருதாணி என்ற திரைப்படஞ்சார்ந்த இதழ்களுக்கும் ஆசிரியராகப் பணியாற்றினார். ‘மருதாணி’ திரைப்படம் சார்ந்த ஒரு பத்திரிகையாக வந்தது. ‘மெட்டி’ குடும்ப நாவல்கள் தாங்கி வந்தது.சப்தம், ராஜரிஷி ஆகிய இதழ்களை நிறுவி அவற்றின் ஆசிரியராக சிறிதுகாலம் இருந்தார்.

**விருதுகளும், பட்டங்களும்:**

கலைமாமணிவிருதுதமிழ்நாட்டரசுஅவர்களாலும்வார்த்தைச்சித்தர்பட்டம் கிருபானந்தவாரியார்அவர்களாலும்ஞானபாரதிபட்டம்குன்றக்குடிஅவர்களாலும் வலம்புரி ஜான் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**முடிவுரை:**

பெரும்பாலான எழுத்தாளர்கள் படைப்பாளர்கள்ஏதோ ஒரு துறையில் மட்டுமே தலைசிறந்து விளங்குவர். ஆனால் வலம்புரி ஜான் அவர்கள் பல பட்டப்படிப்புகள் முடித்து இதழாளராக,ஆசிரியராக, வழக்குரைஞராக, எழுத்தாளராக, ஆலோசகராக, படைப்பாளராக, பேச்சாளராக, பல கட்சிகள் கண்டவராகப் பிரதிபலித்தார். மாற்றங்கள் நிறைய என்றாலும் அவர் தொடர்ந்து தன்னுடைய பாதையில் சென்று கொண்டிருந்தார். அனைத்துத் துறைகளிலும் வெற்றி கண்டார்.வலம்புரி ஜான் 2005 மே 8ஆம் நாள் சிறுநீரக் கோளாறால் தொடர் சிகிச்சைபெற்று காலமானார். வலம்புரிஜான்அவர்கள் உலகைவிட்டு மறைந்தாலும்அவர் படைப்புகளின் வாயிலாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**துணைநூற்பட்டியல்:**

1. டேவிட்பிரபாகர் - கிறித்தவத்தமிழ்நடப்பியல்நோக்கு
உலகத்தமிழாராய்ச்சிநிறுவனம்,
சென்னை- 600 113

2. வணக்கம்வலம்புரிஜான் - வலம்புரிஜான்
105,ஜானிஜான்கான்சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 14

3.ஆரோக்கியசாமிஇ - கிறித்தவஇலக்கியவரலாறு
பூரணரீத்தாபதிப்பகம்,
1130பழனியப்பாநகர்3வதுதெரு,
நாஞ்சிக்கோட்டைசாலை,
தஞ்சாவூர் - 613 006